அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 8

| | |
|---|---|
| **நேரம்: 150 மணித்துளிகள்** | **மொத்தப்புள்ளிகள்: 80**<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்: 04.06.2022** | **பக்கங்கள்: 16** |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. ஒருவரது அடையாளமாக விளங்குவது
   1. உறையுள்
   2. உடைமை
   3. தாய்மொழி
   4. நூல்கள்

2. முதலெழுத்துகளின் எண்ணிக்கை
   1. பன்னிரண்டு
   2. பதினெட்டு
   3. முப்பது
   4. இருநூற்றுப்பதினாறு

3. குறும்பா என்னும் கவிதை வடிவத்தைத் தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகப்படுத்தியவர்
   1. து. உருத்திரமூர்த்தி
   2. சின்னத்தம்பிப்புலவர்
   3. காசி ஆனந்தன்
   4. ஔவையார்

4. எல்லாள மன்னனின் நினைவு மண்டபம் அமைந்துள்ள இடம்
   1. அம்பாறை
   2. அநுராதபுரம்
   3. ஆனையிறவு
   4. அம்பாந்தோட்டை

5. பொய்யாமொழி என அழைக்கப்படுவது
   1. ஆத்திசூடி
   2. கொன்றைவேந்தன்
   3. நாலடியார்
   4. திருக்குறள்

6. கண்டான் என்பதன் வினையடி
   1. காண்
   2. கண்
   3. கண்டு
   4. கண்ட

7. அப்பா எழுதிய அஞ்சல் கிடைத்தது. எழுதிய என்பது
   1. வினைமுற்று
   2. வினையெச்சம்
   3. பெயரெச்சம்
   4. ஏவல்வினைமுற்று

1 2 3 4

8. முல்லை நிலத்தின் சிறப்பான இசைக்கருவி
   1. முரசு
   2. புல்லாங்குழல்
   3. தாளம்
   4. யாழ்

9. 11ஆம் நூற்றாண்டில் தென்கிழக்காசியா எங்கும் பரவியிருந்த ஆட்சி
   1. பாண்டியர் ஆட்சி
   2. சோழர் ஆட்சி
   3. சேரர் ஆட்சி
   4. களப்பிரர் ஆட்சி

10. புலவர் பாடலை எழுதி முடித்தார். இச்சொல்லியம்
   1. ஆறாம் வேற்றுமை
   2. இரண்டாம் வேற்றுமை
   3. மூன்றாம் வேற்றுமை
   4. நான்காம் வேற்றுமை

11. புகழ் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. இன்பம்
   2. கீர்த்தி
   3. இகழ்
   4. இலகு

12. ஆனையிறவில் இருந்த ஆங்கிலேயருடைய கோட்டையைத் தகர்த்த வன்னி மன்னன்
   1. சங்கிலியன்
   2. பண்டாரவன்னியன்
   3. எல்லாளன்
   4. கயிலைவன்னியன்

13. முற்றாகப் படித்தல் என்னும் பொருளைக் குறிக்கும் மரபுச்சொற்றொடர்
   1. கதை கட்டுதல்
   2. காது குத்துதல்
   3. கசக்கிப் பிழிதல்
   4. கரைத்துக் குடித்தல்

14. வேந்தன் என்பதன் ஒத்தபொருட் சொல்
   1. கொற்றவன்
   2. மாற்றான்
   3. ஒற்றன்
   4. பகைவன்

1 2 3 4

15. அவர்கள் நாளை வீட்டுக்கு வரமாட்டார்கள். இச்சொல்லியம்
    1. தொடர்ச்சொல்லியம்
    2. எதிர்மறைச்சொல்லியம்
    3. உடன்பாட்டுச்சொல்லியம்
    4. வினாச்சொல்லியம்

16. தமிழர் வாழும் தமிழீழப் பகுதிகளுள் ஒன்று
    1. கண்டி
    2. காலி
    3. கிளிநொச்சி
    4. கொழும்பு

17. மலை போன்ற தோள். இதன் உவமானம்
    1. மலை
    2. தோள்
    3. போன்ற
    4. வலிமை

18. “குதிரையாரே! குதிரையாரே! நான் என் பெயரை மறந்து விட்டேன்” எனக் கூறியது
    1. பூனை
    2. நாய்
    3. ஆடு
    4. ஈ

19. இயல்புப்புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு
    1. முத்துமாலை
    2. மட்குடம்
    3. வானவில்
    4. போர்ப்படை

20. பாட்டி பொரியலோடு உணவு பரிமாறினார். இதில் பொரியல் என்பது
    1. பொருளாகுபெயர்
    2. சினையாகுபெயர்
    3. தொழிலாகுபெயர்
    4. இடவாகுபெயர்

21. மாலையில் வானம் செக்கச்சிவந்து காணப்பட்டது. செக்கச்சிவந்து என்பது
    1. இரட்டைக்கிளவி
    2. அடுக்குத்தொடர்
    3. இணைமொழி
    4. அடுக்கிடுக்குத்தொடர்

**1 2 3 4**

22. புதிதாகச் செய்த தேர், கப்பல் போன்றவற்றை முதன்முதலாகப் பலர் அறிய ஓட விடுதல்
    1. ஒத்திகை
    2. வெள்ளோட்டம்
    3. வெளியீடு
    4. அரங்கேற்றம்

23. பொன் + காப்பு என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. பொன்காப்பு
    2. பொற்காப்பு
    3. பொற்க்காப்பு
    4. பொட்காப்பு

24. பழங்காலத்தில் தமிழர் கடல் வணிகத்தில் சிறந்து
    1. விளங்கினான்
    2. விளங்கியது
    3. விளங்கினர்
    4. விளங்கும்

25. நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்ற பழமொழியின் பொருள்
    1. வறுமையில் செம்மை
    2. தன்னிடம் இருப்பதைத் தான் அறியாமை
    3. அடக்கம் இன்மை துன்பம் தரும்
    4. ஒன்று இல்லாதபோதுதான் அதன் அருமை தெரியும்

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. நல்ல நல்ல: ______________________________

______________________________

2. உயர்கல்வி: ______________________________

______________________________

3. நகைச்சுவை: ______________________________

______________________________

(3 X 2 = 6 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சங்கமருவிய காலத்தில் இயற்றப்பட்ட காப்பியங்கள் இரண்டையும் எழுதுக.

______________________________

______________________________

2. மகாகவி து. உருத்திரமூர்த்தி தனது கவிதை வாயிலாக எவற்றை எதிர்த்தார்?

______________________________

______________________________

3. பண்டாரவன்னியன் யார் யாருக்குத் திறை கொடுக்க மறுத்தார்?

______________________________

______________________________

4. அநுராதபுர நடுவண் அரசின் முன்னோடிகள் யாவர்?

______________________________

______________________________

5. ஏவல், வியங்கோள் வினைமுற்றுகளுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

ஏவல்: ______________________ வியங்கோள்: ______________________

6. ஆசிரியர் மாணவருக்குப் பரிசு கொடுத்துப் பாராட்டினார். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

வேற்றுமை உருபு: ______________________ பொருள்: ______________________

7. நிரற்கூட்டைப் பொருத்தமாக நிரப்புக.

| **வினையடி** | **பலர்பால்** | **ஒன்றன்பால்** |
|---|---|---|
| கொடு (இறந்தகாலம்) | | |
| பார் (நிகழ்காலம்) | | |

(5 X 2 = 10 புள்ளிகள்)

**4. பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க! வாழ்கவே!
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே!

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்

கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

- அழ. வள்ளியப்பா

1. உழவர் பயிர்களை எதைப் போலக் காக்கின்றனர்?

_______________________________________________

2. உழவர் பயிர்களை எவ்வாறு வளர்க்கின்றனர்?

_______________________________________________

3. கவிஞர் எதை நீதியோ என்று கேட்கிறார்?

_______________________________________________

4. உழவர் எதனை நூறாக உண்டுபண்ணித் தருகின்றனர்?

_______________________________________________

(4 X 1 = 4 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

1. The boys are swimming and playing in the pond.
2. We will be friendly with neighbours.
3. Kuyili drew beautiful paintings and exhibited them.
4. We always keep the body clean.
5. Trains have been suspended yesterday due to snowfall.

**யேர்மனி:**

1. Die Kinder schwimmen und spielen im Teich.
2. Wir werden mit den Nachbarn in Freundschaft bleiben.
3. Kuyili malte schöne Bilder und stellte sie zur Schau.
4. Wir werden den Körper immer rein halten.
5. Wegen des gestrigen Schneefalls wurde der Zugverkehr gestoppt

**நோர்வே:**

1. Barn svømmer og leker i tjernet.
2. Vi er vennlige med våre naboer.
3. Kuyili har malt fine malerier og utstilt dem.
4. Vi må bevare kroppen vår ren.
5. Togene måtte stanses igår på grunn av snøvær.

**இத்தாலி:**

1. I bambini giocano nuotando nel lago.
2. Noi dobbiamo essere amichevoli con il vicinato.
3. Kuyili ha disegnato dei bei dipinti e li ha messi in mostra.
4. Noi dobbiamo tenere sempre il corpo pulito.
5. Ieri a causa della nevicata hanno sospeso i treni.

**நெதர்லாந்து:**

1. De kinderen zwemmen en spelen in het zwembad.
2. we moeten bevriend zijn met onze buren
3. Kuyili tekent mooie tekeningen en stelt ze tentoon.
4. we houden het lichaam altijd schoon
5. door de sneeuwval van gisteren lag het verkeer stil.

**டென்மார்க்:**

1. Børnene svømmer og leger i søen.
2. Vi skal være gode venner med vores naboer.
3. Kuyili tegner flotte tegninger flotte malerier og udstiller dem.
4. Vi skal altid holde vores krop ren.
5. Tog bliver aflyst på grund af snevejr.

**சுவீடன்:**

1. Barnen leker och badar i brunnen.
2. Vi är vara vänner med våra grannar vänskap med våra grannar.
3. Kuyili ritade vackra målningar och visade upp ut dem.
4. Vi ska alltid hålla våra kroppar rena har alltid våra kroppar rena.
5. Igår stoppades tågtrafiken på grund av snöstormen.

**பின்லாந்து:**

1. Lapset leikkivät ja uivat lammikossa.
2. Me ollaan ystävällisiä naapureiden kanssa.
3. Kuyili piirsi kauniita maalauksia ja laittoi ne näyttelyyn.
4. Me pidämme aina meidän kehomme puhtaina.
5. Eilisen lumisateen vuoksi junaliikenne on keskeytetty.

**தமிழ்:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

(5 X 1 = 5 புள்ளிகள்)

**6. பின்வரும் தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. திருக்குறள்
2. தாய்நாடு
3. எனது குடும்பம்

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- குடும்பத்தில் உள்ளோர்
- குடும்பத்தில் பெற்றோரின் பங்கு
- குடும்ப ஒற்றுமை

(15 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பண்பாடு என்பது ஓர் இனத்தின் வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள் போன்றவற்றைக் குறிக்கும். தொன்மைக் காலத்தில் இருந்தே தமிழர் தம் பாண்பாட்டை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்கின்றனர். இவ்வாறு தொடர்ச்சியாகக் காலங்காலமாகத் தமிழரது பண்பாடு பேணப்பட்டு வருகின்றது. இயல், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைகளும் தமிழர் பண்பாட்டைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. தம்மை நாடி வந்தோரை வரவேற்று விருந்தோம்புதல், ஒருவரை ஒருவர் காணும்போது வணக்கம் கூறுதல், நலம் கேட்டல், முதியோரைப் பேணுதல் போன்றன தமிழர் பண்பாட்டினுள் அடங்குகின்றன. மானம், வீரம், கொடை என்பன தமிழரது தனித்தன்மையான பண்பாட்டு அடையாளங்கள். தமிழர் இந்தியா, ஈழம், மலேசியா, சிங்கப்பூர், பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் எங்கும் பரந்து வாழ்கின்றனர். இவர்களால் தமிழரது பண்பாடு பேணப்பட்டு வருகின்றது.

1. நுண்கலைகள் எவை?

_______________________________________________

2. தமிழர் வாழும் நாடுகள் நான்கினை எழுதுக.

_______________________________________________

3. பண்பாடு என்பது எவற்றைக் குறிக்கின்றது?

_______________________________________________

4. தமிழர் பண்பாடுகள் இரண்டினை எழுதுக.

_______________________________________________

5. தமிழரது தனித்தன்மையான பண்பாட்டு அடையாளங்கள் எவை?

_______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி, பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களைக் கட்டத்தினுள் எழுதுக.**

1. பல விலங்குகள் நெடுந்தூரத்தில் இருந்து கொண்டாட்டத்திற்கு வந்தன.
2. அவற்றை வாங்கிய குரங்குக்குட்டி மிகுந்த மகிழ்ச்சியால் துள்ளியது.
3. குரங்குக்குட்டி ஒன்று தனது பிறந்தநாளைக் கொண்டாட விரும்பியது.
4. அவை வரும்போது வாழைக்குலை, பூங்கொத்து, தேங்காய் எனப் பல அன்பளிப்புப் பொருள்களைக் கொண்டு வந்தன.
5. அது காட்டில் உள்ள எல்லா விலங்குகளையும் பிறந்தநாள் விழாவுக்கு அழைத்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |